முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்

நாள்: 07.02.2026 அ.வ.எண்.170/2022 வா.சா.1 - கண்ணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :**

1. இவ்வழக்கில் கோரியுள்ள ஆவணங்களை கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. நேரில் கேட்டேன்.

2. 10-11-2012 அன்று 1 ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கியதாக சொல்வது குறித்து ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. இவ்வழக்கில் கோரியுள்ள ஆவணங்களை கேட்டு 1 ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்ததாக சொல்லும் புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் புகார் மனு ஏற்பு சான்றிதழ் தான் தாக்கல் செய்தேன் என்றும் நான் கொடுத்ததாக சொல்லும் புகாரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) மணிமேகலை என்பவர் கொடுத்த புகாரின் பேரில் வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்பு சான்றிதழ் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்பு சான்றிற்கான புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்பு சான்றில் எனக்கும் , 1 ம் பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்பு சான்றை எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்பதற்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்புச் சான்றிற்கான புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதமாக அமையும் என்பதால் தான் அந்த புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. அடித்து, கெட்ட வார்த்தையால் திட்டியது சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாருக்கு

புகார் மனு ஏற்பு சான்று வழங்கப்பட்டதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.1 புகார் மனு ஏற்பு சான்றின் படி மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கொடுக்கப்பட்டது பொய் புகார் என்பதால் தான் அந்த புகாரின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9. ஜெயா என்பவர் யார் என்றால் எனது சகோதரி. வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்பு சான்றின் படி எனது சகோதரி 1ம் பிரதிவாதி குடும்பத்தாருக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்பு சான்றிற்கான புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்புச் சான்றிற்கான புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதமாக அமையும் என்பதால் தான் அந்த புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11.வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்புச் சான்றில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்குமிடையே பண பிரச்சனை இருந்து முடிந்து விட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் கட்டாயப்படுத்தி எழுதி வாங்கி கொண்டார்கள். அவ்வாறு கட்டாயப்படுத்தி பிரதிவாதிகள் எழுதியதாக சொல்வது குறித்து அவர்களது மேலதிகாரிக்கு புகார் எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. குற்ற வழக்கு எதுவும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கை தான் தாக்கல் செய்துள்ளேன்.

12. எனது சகோதரி யாருடைய அறிவுறுத்தலின் பேரில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக கொடுத்தார் என்றால் அவர் தன்னிச்சையாக தான் கொடுத்தார். வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்புச் சான்றில் கண்ட சம்பவம் பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். பின்னிட்டு கேட்டு தெரிந்து கொண்டேன்.

13. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் ஆகவே நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை அளிக்க இயலாது என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

15. எனது முதல் விசாரணை பத்தி-3 ல் சொல்லியுள்ளவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 3 வது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஆவணங்களையும் 1 ம்பிரதிவாதி வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

16. எனது முதல் விசாரணை பத்தி-4 ல் சொல்லியுள்ளவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

17. நான் சொல்வது போல் பிரதிவாதி ரூ.20,00,000/- கேட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரமாண பத்திரிக்கை 3 மற்றும் 4 வது பத்தியில் சொல்லியுள்ளது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்பதால்தான் அது சம்மந்தமாக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

18. அது போல் எனது முதல் விசாரணை பத்தி-5 ல் சொல்லியுள்ளவாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு 1 ம் பிரதிவாதி ரூ.20,00,000/- என்னிடம் கேட்டிருந்தால் 2017 ம் ஆண்டு எனது மனைவி கொடுத்த புகாரில் மேற்கண்ட சங்கதியை சொல்லியிருப்பார்கள் என்றும், ஆகவே அவ்வாறு 1 ம் பிரதிவாதி ரூ.20,00,000/- பணம் கேட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

19. எனது முதல் விசாரணை பத்தி 3 முதல் 5 வரையில் சொல்லியுள்ள சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பின்னிட்டு யோசனையிட்டு பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

20. வா.சா.ஆ.2 புகார் மனு ஏற்புச் சான்றின் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னை 4 ம்-பிரதிவாதி மிரட்டினார்.

21. எனது சகோதரி கொடுத்ததாக சொல்லும் புகாரின் பேரில் போலீசார் எனது சகோதரியை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது சகோதரி கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் தான் போலீசார் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.